Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 05 வெள்ளிக்கிழமை (20-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 24

அன்பளிப்பு

# யாழ். மீதான நடவடிக்கையின் பின் புலிகள் மேலும் பலமாக உள்ளனர்!

## அமைச்சர் தொண்டா 'லங்காதீப'வுக்கு பேட்டி

கொழும்பு, டிசம்பர் 20

யாழ்ப்பாணம் மீதான 'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் பின்பு தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் பலமடைந்துள்ளனர். முழு யாழ். நகரத்தையுமே மக்களற்ற பகுதியாக்குவதற்கு அவர்களால் முடிந்துள்ளது.

— இவ்வாறு "லங்காதீப" சிங்கள வார இதழுக்கு அளித்த விசேட பேட்டியில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கின்றார்.

அந்தப் பேட்டியில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

வடக்கு யுத்தத்தால் மக்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க)

## கொழும்பில் மீண்டும் இலக்க தகடற்ற பஜிரோ

### பட்டப்பகலில் ஒருவர் கடத்தல்

கொழும்பு, டிச. 20

முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றது போன்று இலக்கத் தகடற்ற பஜிரோ வாகனங்களின் நடமாட்டம் கொழும்பில் மீண்டும் தலைகாட்டத் தொடங்கி உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய வாகனம் ஒன்றில் வந்தோரினால் நேற்று பட்டப்பகலில் தொழிற்சங்கவாதி ஒருவர் கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

வாகனத்தில் வந்தவர்கள் சிவில் உடையில், ஆயுதம் தரித்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொழிற் சங்கவாதி கடத்தப்பட்டதுக்கு தொழிற்சங்க வட்டாரங்கள் பொலீஸார் மீது சந்தேகம் தெரிவித்துள்ளன. ஆனால் அப்படி தாம் எவரையும் கைது செய்யவில்லை என்று பொலீஸார் கைவிரித்து விட்டனராம். (இ-6)

## ஹபரணவில் கடும் சோதனை

சவகச்சேரி, டிச. 20

யாழ். போதனாவைத்திய சாலைக்கு கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்ட 4 ஆம் கந்தாய மருந்து வகைகளை திருகோணமலையில் வைத்து படையினர் துருவித்துருவி சோதனையிட்டனர் என்றுதெரியவந்தது.

கொழும்பிலிருந்து 4 லொறிகளில் எடுத்துவரப்பட்ட இந்த மருந்துப் பொருள்கள் திருகோணமலையில் 'ஹபரண' கப்பலில் ஏற்றப்படுவதற்கு முன்பாக படையினரால் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மருந்துப் பெட்டிகள் அனைத்தும் உடைக்கப்பட்டு படையினரால் சோதனை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ★ ஆசிரியர்கள் உட்பட மாகாணசபையின் கீழ் பணியாற்றும் ஊழியருக்கு இம்மாத கட்டுநிதி வந்தது

சாவகச்சேரி, டிச. 20

யாழ்ப்பாணத்தில் மாகாணசபையின் கீழ் உள்ள திணைக்களங்களில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்கான கட்டு நிதி யாழ். அரச அதிபருக்கு நேற்றுக் கிடைத்தது.

மாகாணசபை அதிகாரி ஒருவரினால் இந்த கட்டு நிதிக்கான காசோலைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள், உள்ளூராட்சி சபை ஊழியர்கள், பிரதேச செயலர் அலுவலக ஊழியர்கள் உட்பட மற்றும் மாகாண சபைக்கு கீழ் வரும் திணைக்களங்களுக்கான கட்டு நிதியும் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசின் கீழ் நேரடியாக வரும் திணைக்களங்களுக்குரிய — டிசம்பர் மாதத்துக்கான — கட்டுநிதி இன்னும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## ராணுவச் செய்திகள் மீதான தணிக்கை இன்றுடன் நீக்கம்

கொழும்பு, டிச. 20

இராணுவச் செய்திகள் மீது அரசினால் விதிக்கப்பட்டிருந்த தணிக்கை இன்று நள்ளிரவு 12 மணியுடன் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி இது தொடர்பாக அறிக்கை ஒன்றை நேற்று விடுத்தார்.

இராணுவச் செய்திகள் மீதான தணிக்கையை நீக்கி விடுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாணசபையின் கீழ் பணியாற்றாத யாழ். மாவட்ட அரச ஊழியரின் இம்மாத சம்பளம் இடை நிறுத்தம்?

### ஓய்வூதியமும் இல்லை

சாவகச்சேரி, டிச. 20

யாழ். குடாநாட்டில்— மாகாணசபையின் கீழ் வராத — ஏனைய திணைக்களங்களில் பணியாற்றுகின்ற அரச ஊழியர்களின் இம்மாதச் சம்பளத்தையும், குடாநாட்டில் உள்ள ஓய்வூதியர்களின் இம்மாத ஓய்வூதியத்தையும் வழங்காமல் — கொடுப்பனவை இடை நிறுத்த — ஸ்ரீ லங்கா அரசு முயற்சித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

அரச ஊழியரின் சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை ஒரு பிடியாக வைத்து—

வலிகாமத்திலிருந்து இராணுவ நடவடிக்கையை அடுத்து வெளியேறிய மற்றும் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் உள்ள அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் போன்றோரை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சிக்கவைக்க அரசு முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த 'குள்ள நரித் திட்டம்' செயற்படுத்தப்படுவதற்கான உத்தரவுகள் உரிய அதிகாரிகளைச் சென்றடைய முன்னரே வடக்கு - கிழக்கு மாகாணசபை குடாநாட்டில் தனக்கு கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியருக்கான — டிசம்பர் சம்பளத்துக்குரிய — கட்டு நிதியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் குடாநாட்டில் உள்ள — நேரடியாக மத்திய அரசின் கீழ் இயங்கும் — திணைக்களங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் அரச ஊழியர்களின் இம்மாதச் சம்பளக் கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியர்களின் இம்மாத ஓய்வூதியக் கொடுப்பனவு ஆகியவற்றுக்கான கட்டுநிதி இன்னும் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவில்லை.

வழமையாக —

அரச ஊழியரின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்கத் தேவையான கட்டு நிதியை கொழும்பில் உள்ள யாழ். செயலகக் கிளை அதிகாரிகள் திறைசேரியில் பெற்று வங்கியில் ... யாழ்ப்பாணத்தில் கொடுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி தூதுக்குழு நாளை ஜனாதிபதியை சந்திக்கும்

### நிபந்தனையுடன் ஆதரவு வழங்கும்?

கொழும்பு, டிச. 20

தமிழர் விடுதலைக் கூட்டணி தூதுக்குழுவுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நாளை மாலை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள். யாழ், மாவட்ட அரசாங்க ஊழியர்களின் டிசம்பர் மாத சம்பள இடை நிறுத்தம் போன்ற விவகாரங்கள் இந்த சந்திப்பின் போது ஆராயப்படும் என தெரியவருகிறது.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித்தரும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு நகரில் கிலியை ஏற்படுத்திய சைக்கிள்!

### குண்டுப் புரளியால் பதற்றம்

கொழும்பு, டிச. 20

மட்டக்களம்பு நகரில் கடந்த வெள்ளியன்று எழுந்த குண்டுப் புரளி காரணமாக நகரம் சிறிது நேரம் பரபரப்புக்குள்ளானது.

பிரதிப் பொலீஸ்மா அதிபர் அலுவலகம் முன்பாக நீண்ட நேரம் கவனிப்பாரற்ற நிலையில் நின்ற சைக்கிள் ஒன்றே நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்த சைக்கிளில் குண்டு பொருத்தப்பட்டிருக்கலாம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் சந்திக்கவும்

யாழ்ப்பாணம்
கலியுகவரதன் விற்பனை நிலையத்தில்
கடமையாற்றிய

S. R. பாலேந்திரா
கி. பி. தம்பிப்பிள்ளை

ஆகியோர் தயவு செய்து டச்சு வீதி, சாவகச்சேரியில் இயங்கும் கலியுகவரதன் விற்பனை நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும். (39640)

## தேடுகின்றார்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த புலேந்திரன் சரஸ்வதி என்பவர் தனது மகன் புஸ்பதாஸ் (ரஞ்சன்) என்பவரைத் தேடுகின்றார்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

பு. சரஸ்வதி
மே/பா. ம. சிவசுப்பிரமணியம்
ஐயா கடையடி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. (39654)

## விலை குறைப்பு

**மில்க்வைற் நீல சோப்**

கட்டி ஒன்று ரூபா 25/-
அரைக் கட்டி ஒன்று ரூபா 12/-

மில்க்வைற் தொழிலகம்
கண்டி வீதி, — மீசாலை.
(39557)

## வட மாகாண ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் சமாசத்தின் முக்கிய அறிவித்தல்

16-12-95 இல் கூ.அ.உ. ஆணையாளர் திரு.தி. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் 7 ஆவது தீர்மானத்துக்கமைய ஒவ்வோர் சங்கங்களில் இருந்தும் பிரயாணம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டோர் இன்று நண்பகல் 1 மணிக்கு கூ. அ. உ. ஆணையாளர் அலுவலகத்திற்கு பிரயாண ஒழுங்குகளுடன் சமுகம் தரவும்.

கி. சிவநேசன்
பொது முகாமையாளர்
[சி-3058] வட.மா.ப.தெ.வ.கூ.ச.சமாசம்

## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம் அறிவித்தல்

இடம்பெயர முன்னர் எமது சங்கத்துடன் பங்கீட்டு அட்டை இணைக்கப்பட்ட பாவனையாளர்கள், தற்போது தங்கள் நிவாரணங்களை வேறு சங்கக் கிளைகளில் பெறவேண்டிய நிலைக்குள்ளாக்கப் பட்டிருப்பின், தங்கள் பங்கீட்டு அட்டைகளை மீளவும் எமது சங்கத்துடன் இணைத்து, தங்கள் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு, தாங்கள் வசிக்கும் இடத்துக்கு அண்மையிலுள்ள எமது விற்பனை நிலையங்களில் தங்கள் பெயர், பங்கீட்டு அட்டை இலக்கத்தை 23-12-95 க்கு முன்னர் பதிவு செய்து, சங்கத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சங்கத்தின் விற்பனை நிலையங்கள் பின்வரும் இடங்களில் இயங்குகின்றன.

1. பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி.
2. சாவகச்சேரி மகளிர் கல்லூரி முன்பாக, சாவகச்சேரி.
3. திலீபன் வீதி, சரசாலை மத்தி, சரசாலை.
4. கல்வயல் மத்தி, 1 ஆம் கட்டை, கல்வயல்.
5. பிலிப் வீதி, மட்டுவில் மத்தி.
6. இலுப்பையடி ஒழுங்கை, மட்டுவில் தெற்கு.
7. உசன் கந்தசாமி கோயில் முன்றில், மிருசுவில்.
8. மீசாலை புகையிரத வீதி அருகில், மீசாலை.
9. மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், மறுவன்புலவு, கைதடி, நாவற்குழி.
10. பருத்தித்துறை வீதி, கொடிகாமம் சந்தி, கொடிகாமம்.
11. சரசாலை வடக்கு, ஸ்ரீகணேசா வித்தியாலயம் அருகில், சரசாலை.
12. அல்லையம்பதி முருகன் தெற்கு வீதி, துன்னாலை வடக்கு, துன்னாலை.
13. கைதடிச் சந்தி, கைதடி.

தலைவர் பொது முகாமையாளர்
(சி/3059)

# இலங்கையர் உட்பட 128 பேரை ஏற்றிச் சென்ற கப்பல் தரைதட்டியது

## சிசிலி கரையில் சம்பவம்

இலங்கை உட்பட ஆசிய நாடுகளைச் சேர்ந்த 128 பேரைசட்டவிரோதமாக ஏற்றிச் சென்ற கிரேக்கக் கப்பல் ஒன்று சிசிலியில் தரைதட்டியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத குடியேற்றவாசிகளை இத்தாலிக்கு அழைத்துச் செல்கிறார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கப்பலின் கப்டனும், ஐந்து பணியாளர்களும் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிசிலி கரையோரத்தில் அந்தக் கப்பல் தரைதட்டியதும் 128 பயணிகளையும், கப்பலையும் கைவிட்டு தப்பிச் செல்ல முயன்ற சமயமே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை, பாகிஸ்தான். இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தோரே சட்டவிரோதமாக குடியேற இக்கப்பலில் அழைத்துச்செல்லப்பட்டு இவ்வாறு அவல நிலையில் விடப்பட்டவர்களாவர்.

இந்த 128 பேரில் இரண்டு சிறுவர்களும், 12 பெண்களும் அடங்குவர். பெண்களில் ஒருவர் ஆறு மாத கர்ப்பிணி என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் "யேகன்" என்ற இந்தக் கப்பலில் ருமேனியாவில் இருந்தும், துருக்கியில் இருந்தும் ஏறியுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இரண்டு வாரங்களுக்குள் இவர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று சிசிலி அரசாங்கம் உத்தரவிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# கல்வீச்சின் மத்தியில் நடந்த தீப்பந்தம் ஏந்தி ஓடும் நிகழ்ச்சி

சென்னை. டிச. 20

கடந்த திங்களன்று சென்னையில் ஆரம்பமான ஏழாவது "சாவ்" விளையாட்டுக்களில் — முன்னோடி நிகழ்ச்சியாக இடம் பெற்ற— தீப்பந்தம் தாங்கி ஓடி வரும் நிகழ்ச்சியின் போது — பரவலாக கல்வீச்சுச் சம்பவங்கள் இடம்பெற்றதாக பொலீஸார் தெரிவித்தனர்.

'சாவ்' விளையாட்டுக்களை ஆரம்பித்து வைப்பதற்கான தீப்பந்தத்தை மெய்வல்லுநர்கள் — அஞ்சல் முறையில்— பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு ஊடாக எடுத்து வந்த போதே கல்வீச்சுச் சம்பவங்கள் இடம் பெற்றன.

இதனையடுத்து தீப்பந்தம் எடுத்துச் செல்லும் பாதையை மாற்றியமைத்த விளையாட்டுப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தமிழ் நாட்டின் பகுதிகளில் தீப்பந்தம் எடுத்துச் செல்வதை முற்றாக ரத்துச் செய்தனர் என்றும்—

பாண்டிசேரியிலிருந்து விளையாட்டுப் போட்டிகளின் அங்குரார்பன வைபவம் நடைபெறும் ஜவஹர்லால்நேரு விளையாட்ரங்குக்கு நேரடியாக தீப்பந்தம் எடுத்து வரப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# பெரும் பூமியதிர்ச்சி ஏற்படும் ஆபத்து பூகர்ப்பவியல் நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, டிச. 20

இலங்கையும் பூமியதிர்ச்சிக்கு இலக்காகலாம் என்ற எச்சரிக்கை தொடர்பாக மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது இலங்கையில் ஏற்பட்டு வரும் நிலநடுக்கங்கள் பெரும் பூமியதிர்ச்சிக்கான முன்னறிவிப்புகளாக இருக்கலாம் என்று பேராதனைப் பல்கலைக்கழக மண்ணியல்துறை முன்னாள் பீடாதிபதியும், ஆலோசகருமான பேராசிரியர் பி. டபிள்யூ. விதானகே எச்சரித்திருக்கின்றார்.

நிலநடுக்கம் மற்றும் பூமியதிர்ச்சி ஆகியவை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;-

இலங்கையும், தென்னிந்தியாவும் பூமியதிர்ச்சியால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு குறைவு என்பதே பொதுவான நம்பிக்கை. ஆனால் 1615 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி கொழும்புப் பகுதியில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியில் மட்டும் இரண்டாயிரம் பேர் வரை உயிரிழந்தனர்; போர்த்துக்கீசரின் கோட்டையில் மட்டும் ஐநூறு வீடுகள் சேதமடைந்தன.

1993 இல் மஹாராஷ்டிராவில் இடம்பெற்ற பெரும் பூமியதிர்ச்சியில் 15 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

இதுதவிர, இந்தியாவிலும் இலங்கையிலும் தொடர்ந்து பல நில அதிர்வுகளும், நில வெடிப்புகளும் அவதானிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் மட்டும் 8 ஆயிரத்துக்கும் அதிகமான நில வெடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்தகைய நில வெடிப்புகளுக்கு மேலாகவே விக்டோரியா, கொத்மலை, ரன்தெனிகல போன்ற நீரணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தனி ஒரு பூகர்ப்ப நிலத்தட்டின் ஒரு பகுதியாகவே இலங்கையும் இந்தியாவும் உள்ளன.

ஆனால் இந்தியாவுக்குக் கீழ் உள்ள நிலத்தட்டு திபெத், சீனா ஆகியவற்றுக்கு ஊடாக துண்டுபட்டு வடக்கு நோக்கியும்—

இலங்கைக்கு கீழ் உள்ள நிலத்தட்டு தென்கிழக்காகவும் நகர்கின்றன.

எதிரெதிர் திசையிலான இந்த இழுவை காரணமாக கடந்த காலங்களில் பூமியதிர்ச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

எமது நாட்டில் உள்ள நில வெடிப்புக்களில் ஒன்று விக்டோரியா அணைக்கு ஊடாகச் செல்கின்றது.

கிம்புள்தொட்ட, திகணை, கண்ணொருவ ஆகியவை ஊடாக நாலாவது கட்டம் வரை இந்த வெடிப்பு செல்கின்றது.

பூமியதிர்ச்சிகளால் நீர் அணைகள் ¼ சென்ரி மீற்றர் அசைந்து, அதன் ஒழுங்கமைப்பு குலைந்தால் அந்த அணை முற்றாக நாசமாகிவிடும். எனவே அரசு இந்த விடயம் குறித்து முக்கிய கவனம் எடுக்கவேண்டும்.

நீரணைப் பகுதிகளில் இத்தகைய ஆபத்து இருப்பதால் அப்பகுதிகளில் பூமியதிர்வை அளவிடும் கருவிகளைப் பொருத்த வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டது.

இதனடிப்படையில் 1980 இல் அத்தகைய எட்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டன.

நீர் அணையை அண்டிய பகுதிகளில் — 2.5 றிச்டர் அளவுக்குக் குறைந்த — நூறு முதல் இருநூறு சிறிய வலுவுள்ள பூமி அதிர்வுகளை இந்த இயந்திரங்கள் பதிவு செய்துள்ளன.

ஆனால் அந்த இயந்திரங்களைப் பராமரிப்பதற்கான நிதிப் பற்றாக்குறை காரணமாக அவை கைவிடப்பட்டுவிட்டன. அதனால் நீர் அணைப்பகுதியில் ஏற்படும் அதிர்வுகளை அளவிட்டு கண்டுபிடிக்க முடியாத நிலை இப்போதுள்ளது.

— இவ்வாறு பேராசிரியர் விதானகே மேலும் தெரிவித்தார். (உ)

## உடன் வரவும்

அ. ஜெயசீலன் [சுகாதாரப்பகுதி மேற்பார்வையாளர், யாழ்/ மாநகர சபை] அவர்களை சின்னப்புதுக்குளம், வவுனியாவில் உள்ள தாயார் சின்னத்தங்கச்சி அவர்கள் உடன் வவுனியா வருமாறு அழைக்கின்றார்.

தகவல்:
அ. யேசுநேசன்
(சுகோதரர்)
[39555]

## சவர்க்காரம் தட்டுப்பாடு நீங்கும்

சாவகச்சேரி, டிச. 20

குடாநாட்டு மக்களுக்கு தாராளமான அளவு சவர்க்காரம் கப்பலில் வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் "மாஹோ" கப்பலில் குடாநாட்டு மக்களுக்கு 90 மெற்றிக் தொன் சவர்க்காரம் எடுத்து வரப்படுகிறது.

வர்த்தகத் திணைக்களம், செயலகம், ப நோ.கூ. சங்கங்கள் ஆகியவற்றுக்கு இந்த சவர்க்காரம் எடுத்து வரப்படுகிறது.

தற்சமயம் திருகோணமலையில் தரித்துள்ள இக்கப்பலில் இரு மாதங்களுக்கான கோட்டாவான 5 ஆயிரம் பரல் மண்எண்ணெய்யும் எடுத்து வரப்படுகின்றது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டாலும் ராணுவ நடவடிக்கை தொடருமாம்!

இனப்பிரச்சினை தீர்வுக்கான அரசின் அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும் புலிகளைப் பலவீனப்படுத்தும் இராணுவ நடவடிக்கையைத் தொடர அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக 'திவயின' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தீர்வுத் திட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## மட்டு. களுவாஞ்சிக்குடியில் 4 மின்கோபுரங்கள் தகர்ப்பு

### பெரும் பகுதி இருளில்

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நான்கு மின்கோபுரங்களை இனந் தெரியாதவர்கள் கடந்த ஞாயிறன்று தகர்த்ததையடுத்து மட்டக்களப்பு, போரதீவு, களுவாஞ்சிக்குடி, செட்டிப்பாளையம், ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இங்கிரியாகல ஊடாக மின்சாரம் வழங்கும் 33 ஆயிரம் வோல்ட் சக்தி மிக்க மின் கடத்திகளே தகர்க்கப்பட்டுள்ளன. (இ-3-6)

## விமானம் மூலம் துண்டுப் பிரசுரம் போடப்படும்!

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களுக்கு செல்லுமாறு கோரும் துண்டுப்பிரசுரங்களை படையினர் விமானத்தில் இருந்து இவ்வாரம் வீச இருப்பதாக 'லங்காதீப' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

# கொடியைப் பறக்க விடுவதால் பிளவுண்ட தேசம் இணையாது

### கொழும்பு பத்திரிகை கருத்து

''வடக்கே சிங்கக்கொடியைப் பறக்க விடுவதாலும், யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி புலிகளை ஒடுக்கி விடுவதாலும் பிளவுண்டுள்ள தேசங்களை ஒன்றாக இணைத்துவிட முடியாது; சமாதானத்தையோ, ஐக்கியதையோ சாதித்து விட முடியாது. இவற்றால் நாட்டை மேலும், மேலும் பிளவுபடுத்த மட்டுமே முடியும்.''

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றில் வெளியான அரசியல் கண்ணோட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''நாட்டைப் பிளப்பதற்கான முதற்படி'' என்னும் தலைப்பில் எழுதப்பட்டுள்ள அந்த அரசியல் கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இனப்பிரச்சினை தீர்வுக்கான அரசின் ''அரசியல் தீர்வுப் பொதி'' இப்போது ''வெணதாமரை'' காரர்கள் நேரம் வந்தால் மட்டும் கதைக்கும் விவகாரமாகி விட்டது.

ஜனாதிபதி மட்டும்தான் அதை எப்போதவது ஞாபகம் வைத்திருந்து குறிப்பிடுவார். அரசாங்கம் அதன் பெயரைத்தவிர மற்றவற்றை மறந்து விட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இராணுவ வெற்றிகள் அடுத்தடுத்துத் தொடருமானால், தீர்வு யோசனைகளை வீசிவிடவும் இந்த அரசு தயங்காது என்பதற்கு இவையெல்லாம் நல்ல உதாரணங்கள்.

அரசியல் ரீதியான தீர்வு ஒன்றைக் கண்டு அவற்றை மகாபக்குவமாக நடைமுறைப்படுத்துவற்கான வழிகளை உருவாக்குவதன் மூலமாக, தமிழ் மக்கள் இனரீதியான ஒடுக்கு முறையிலிருந்து விடுபட முடியும் என்பதை நம்பும் ஒருசூழலை உருவாக்க வேண்டும். அப்போதுதான் பிளவுண்ட தேசங்கள் ஐக்கியப்படுவது சாத்தியம்.

இந்த அடிப்படையைகணக் கெடுக்காவிட்டால், இந்த வெற்றி சமாதானத்திற்கான ஆரம்பப்படியாக அல்ல, சமாதானத்தின் சவக் கிடங்குக்கான வெட்டாகவே அமையும். வேறுவார்த்தையில் சொன்னால் நாட்டைப் பிளப்பதற்கான பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசங்கத்தின் ஆரம்பப்படியாக இது அமையும்.— என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3)

## இடம் பெயர்ந்தோருக்கு 3 ஆம் கட்ட உலர் உணவு நாளை முதல் விநியோகம்

சாவகச்சேரி டிச. 20

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கான 3 ஆம் கட்ட இரு வார உலர் உணவு நிவாரணம் நாளை வியாழக்கிழமை முதல் வழங்கப்பட இருப்பதாக யாழ். அரச அதிபர் திரு, செ. பத்மநாதன் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்துள்ளவர்களில் ''இ'' அட்டைவைத்திருப்போருக்கு இலவசமாகவும். —

'உ' அட்டை வைத்திருப்போருக்குப் பணத்துக்கும் — பொருள்கள் வழங்கப்படும்.

## தென்மராட்சி, வடமராட்சியில் இடம்பெயராதோருக்கும் பங்கீட்டு அட்டைக்கு உணவு

சாவகச்சேரி, டிச. 20

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களுக்கும் பங்கீட்டு அடிப்படையில் நாளை வியாழன் முதல் உலர் உணவு விநியோகிக்கப் படவுள்ளது.

குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு வழங்கப்படும் பொருள்களின் அட்டவணைப்படி பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இவர்கள் தமது ப. நோ. கூ. சங்க கிளைகளில் பங்கீட்டு அட்டையைச் சமர்பித்து பணம் செலுத்தி உணவுப் பொருள்களைப் பெறலாம் என்று அரச அதிபர் தெரிவித்தார். (ஐ-3)

## முகாமில் உள்ளோருக்கும் பங்கீட்டு அட்டைகள்

சாவகச்சேரி, டிச. 20

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கும் பங்கீட்டு அட்டை வழங்கப்பட விருக்கிறது.

நலனோம்பு நிலையங்களில் தங்கியிருப்போர் தனியாகவோ அல்லது கூட்டாகவோ சமைக்க விரும்பும் பட்சத்தில்—

வலய மேலதிக அரச அதிபர்கள் அதை உறுதிப்படுத்தினால் அவர்களுக்கு பங்கீட்டு அட்டை வழங்கப்படும் என செயலகம் தெரிவித்துள்ளது.

புதிதாக வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைகள் இது வரை நலனோம்பு நிலையங்களில் இருப்பவர்களுக்கு வழங்கப்படாததும்—

அவர்களிடம் சமைக்கத் தேவையான வசதிகள் இல்லாததால் அரச சார்பு அமைப்புக்கள் அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

# அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகள் அரசின் தீர்வு திட்டத்துக்கு எதிர்ப்பு!

### ஆதரிப்பதாக வெளியான செய்திகளை மறுக்கின்றனர்

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்ட யோசனைகளை தாங்கள் தொடர்ந்தும் எதிர்த்து வருவதாக மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகள் அறிவித்துள்ளார்கள்.

தமது முன்னைய நிலைப்பாடுகளை மாற்றி, தீர்வுத் திட்டத்தை தாங்கள் ஆதரிப்பதாக சில பத்திரிகைகளில் வெளியான செய்திகளையும் அவர்கள் மறுத்துள்ளனர்.

'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு தனித்தனியாக வழங்கிய பிரத்தியேக பேட்டிகளிலேயே அவர்கள் இத்தகவலை வெளியிட்டனர்.

''நாம் அரசின் தீர்வுத் திட்ட யோசனைகளை ஆதரிக்கவில்லை. விடுதலைப் புலிகளின் சக்தியை உடைத்துவிட்டு வடக்கில் சிவில் நிர்வாகத்தை மீள உருவாக்கும் விடயத்திலேயே நாம் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கினோம்'' — என்றார் அஸ்கிரிய பீடாதிபதி வண. பலிப்பானே சந்திரானந்ததேரர்.

''அதிகாரப் பகிர்வுத் திட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. அதனால் அதனோடு இணங்கிப் போக மகா சங்கத்தினால் முடியாமல் உள்ளது.''

'அரசாங்கம் முதலில் பயங்கரவாதத்தை ஒழிப்பது பற்றியே சிந்திக்க வேண்டும்.'

வடக்கு — கிழக்குப் பிரதேசத்தின் சில பகுதிகளில் பயங்கரவாதம் தொடரும் போது அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது ஆபத்தான விளைவுகளைத் தந்துவிடலாம்.' — என்று மல்வத்தை பீடாதிபதி றம்புக்காவல விபஸீ தேரர் தெரிவித்தார்.

'அரசின் நிர்வாகத்தில் மகா சங்கம் தலையிடுவதில்லை. ஆனால் அரசாங்கம் புதிதாக எதையும் கொண்டு வரும் போது அதுபற்றி ஆலோசனை கூறுவது மகா சங்கத்தின் கடமையாகும். அந்த ஆலோசனைகளை ஏற்பதும் விடுவதும் அரசாங்கத்தைப் பெறுத்த விடயமாகும்.'—இவ்வாறுவிபஸீதேரர் மேலும் குறிப்பிட்டார்.

### தந்திகள்

அண்மையில் ''குமண'' கப்பலில் எடுத்து வரப்பட்ட பெருமளவு தந்திகள் சாவகச்சேரில் இயங்கும் யாழ். பிரதம தபால் நிலையத்தில் உள்ளன. உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## வெறிச்சோடிக்கிடக்கும் வர்த்தக நிலையங்கள்

### கொழும்பில் குண்டுப் பீதி

கொழும்பு, டிச. 20

பெரும் சனநெரிசல் உள்ள வர்த்தகப் பகுதிகளாக இதுவரை இருந்துவந்த கொழும்பு கோட்டை, புறக்கோட்டை வர்த்தக நிலையங்கள் மற்றும் நடைபாதைகள் தற்போது வெறிச்சோடிக் கிடக்கின்றன.

சனநெரிசல் உள்ள இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அச்சமே இதற்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நத்தார், புதுவருடத்துக்கு பொருள்களை வாங்குவோர் தற்போது கோட்டை, புறக் கோட்டை வர்த்தக நிலையங்களைத் தவிர்த்து வருகின்றனர்.

கோட்டை, புறக்கோட்டையில் மில்லர்ஸ், கார்கிள்ஸ், ரைற்றஸ் பகுதிகள் வழமையாக சுறுசுறுப்பாக வியாபாரம் நடைபெறும் பகுதிகள் ஆகும்.

பெரும்பாலானோர் தற்போது கோட்டை, புறக்கோட்டையைத் தவிர்த்து, தெஹிவளை, நுகேகொடை, கிரிபத்கொட ஆகிய இடங்களில் உள்ள வர்த்தகத் தொகுதிகளுக்கே செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## மரக்கறி பயிர்ச் செய்கைக்கு அவசர திட்டம் விரைவில்

### யாழ். செயலகம் நடவடிக்கை

சாவகச்சேரி, டிச. 20

தற்போது ஏற்பட்டுள்ள மரக்கறி தட்டுப்பாட்டை அடுத்து அவசர பயிர்ச் சொய்கைத் திட்டம் ஒன்றை யாழ். செயலகம் நடைமுறைப் படுத்தவுள்ளதாக யாழ். அரச அதிபர் திரு, செ. பத்மநாதன் தெரிவித்தார்.

மரக்கறி தட்டுப்பாட்டை நீக்குவதுடன் விவசாயிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த அவசர பயிர்ச் செய்கைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இந்தத்திட்டம் குறித்து விரிவாக ஆராய கைதடி வலய மேலதிக அரச அதிபர் அலுவலகத்தில் யாழ். அரச அதிபர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

★ மரக்கறி உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் 12 ஆயிரம் மெற்றிக் தொன் மரக்கறியை இலக்காகக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

★ அரச சார்பற்ற அமைப்புக்கள் ஊடாக இத்திட்டத்தை செயற்படுத்துதல்.

★ வெங்காயம், புகையிலை போன்ற பயிர்களைப் பயிரிடுவதைத் தவிர்த்து மரக்கறி வகைகளை கூடுதலாகப் பயிரிடுதல்.

★ இத்திட்டத்துக்கு தேவையான 50 வீதமான மரக்கறி விதைகளை விவசாயப் பகுதி வழங்கும். [ஐ-3]

# தமிழ்க் கட்சிகள் ஆதரவு தொடர்ந்து கிடைக்கும் என அரசு நம்பிக்கை

கொழும்பு, டிச, 20

அதிகாரப்பகிர்வுத் திட்டத்தின் சட்டவரைவை உடனடியாக வெளியிட வேண்டும் என கொழும்பு தமிழ்க் கட்சிகள் குரல் எழுப்பினாலும் —

தாம் தொடர்ந்து தப்பிப் பிழைப்பதற்காக, அவை தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவு வழங்கி வரும்.

இவ்வாறு அரசாங்கம் திடமாக நம்புவதாக 'த சண்டே லீடர்' ஆங்கில வார இதழில் அதன் அரசியல் செய்தியாளர் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால் —

அரசுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவது தொ[illegible] தமது நிபந்தனைகளை நேரடியாக தெரிவிப்பதற்காக — ஜனாதிபதி குமாரதுங்காவை — தனியாகச் சந்திப்பதற்கு நேரம் கேட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருப்பதாக அச்செய்தியாளர் குறிப்பிட்டார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

Yamaha R S 125 (மக்னட்டோ மொடல்) மோட்டார் சைபிக்கிள், பெண்கள் லுமாலா சைபிக்கிள், ஆங்கில தட்டச்சு இயந்திரம். தொடர்பு: K. பாலமனோகரன், வீரபத்திரர் ஒழுங்கை, நுணாவில் மேற்கு.
(30647)

ஆங்கில, தமிழ் தட்டச்சு யந்திரங்கள், துவிச்சக்கர வண்டிகள், தையல் மெஷின், TV, Deck, போன்ற மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள். விளம்பரதாரர் C/o நாகேந்திரம், கெருடாவில் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதி, கெருடாவில், சாவகச்சேரி.
(89541)

புதிய நிலையிலுள்ள வீல் செயர் (Wheel chair) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் தீன்சுவை வெதுப்பகம், துறைமுக வீதி, பருத்தித்துறை. (39540)

*இடமாற்றம்*

யாழ்ப்பாணம், நவீன சந்தையில் இயங்கிவந்த ''ராசி சில்க்ஸ்'' தற்போது கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (C/3053)

*தேவை*

வார்ப்புப் பாத்திரங்கள், பிட்டுப் பானைகள், Bag's, Chip Rannar வகைகள் அழகு சாதனப் பொருள்கள் மொத்தமாகத் தேவை. தொடர்பு: இல. 505 C/o உதயன், சரசாலை.
(39646)

றேடியோ திருத்துவதற்கான உபகரணங்கள் Multymeter, Frequeney Meter, Signal Injector, Signal Tracer, Oscilloseope என்பன விலைக்கு கொள்வனவு செய்யப்படும். கடித மூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும். சி. சச்சிதானந்தன், Electrical and Mechanical Contractor, டச்சு றோட், மீசாலை வடக்கு.
(39649)

## ஒய்வூதிய வவுச்சர்கள்

சாவகச்சேரி, டிச. 20

யாழ்.ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, ஹட்டன் நஷனல்வங்கி ஆகிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் இதுவரை நவம்பர் மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சரைப் பெறாது இருந்தால் இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன்பதாக, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். கச்சேரி பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தரிடம் இருந்து தமது ஓய்வூதிய வவுச்சரைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். செயலக பிரதம கணக்காளர் அறிவித்துள்ளார். (இ)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ் — வன்னி தொடர்பு சேவை செயலகத்தில் பணியாற்றிய திரு.பரராஜசிங்கம், திரு. பரம்சோதி ஆகியோரை சாவகச்சேரியில் உள்ள அனுமதிக்கான விசாரணைச் செயலகத்தில் அல்லது கிளிநொச்சியில் உள்ள அனுமதிக்கான விசாரணைச் செயலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பெறுப்பாளர் கோரியுள்ளார்.

### பிரேமதாஸா போன்று தவறு விடுவதில்லை:

# தனது சொந்தப் பாதுகாப்பில் சந்திரிகா உறுதியாக உள்ளார்!

கொழும்பு, டிச. 20

பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி பிரேமாதாஸா விட்ட தவறை தாம் விடுவதில்லை என்பதில் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகவும் உறுதியாக இருக்கின்றார்.

'ரைம்ஸ்' பத்திரிகையில் இலங்கை விவகாரம் தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரும்புலித் தாக்குதல்கள் குறித்து இந்தக் கட்டுரை வரையப்பட்டிருந்தது.

பிரேமதாஸா தமக்கு வழங்கப்பட்ட— திக்குமுக்காட வைக்கும்— பாதுகாப்பை பொறுத்துக் கொள்ளமுடியாமல் அவற்றை மீறி அவ்வப்போது பொது இடங்களில் தோன்றினார்.

ஆனால் அந்தத் தவறை விடுவது இல்லை என்பதில் சந்திரிகா குமாரதுங்க உறுதியாக இருக்கின்றார்.

கடந்த இரண்டு மாதங்களில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட — மூடப்பட்ட — ஒரு சில உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளில் மட்டுமே சந்திரிகா கலந்து கொண்டார். அந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் மிகக் கவனமாக பொறுக்கி எடுக்கப்பட்டவர்களாக இருந்தனர்.

அவரது வீட்டைச் சூழவுள்ள சகல பாதைகளும் மூடப்பட்டன. பாரம் குறைந்த விமானங்கள் மூலம் நடக்கக் கூடிய தற்கொலைத் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காக அவரது இல்லத்தில் ''ராடர்'' சாதனம் கூட பொருத்தப்பட்டது.

மற்றவர்களுடன் இணைந்து வாழ வேண்டும் என்று விரும்புகின்ற ஜனாதிபதி இந்த கெடுபிடிகள் குறித்து வெறுப்புற்றாலும் அவருக்கு வேறு வழி எதுவுமில்லை என்று அவரது நண்பர்கள் கூறுகின்றனர்.

கிழக்கு நகரான மட்டக்களப்பிலிருந்து தற்கொலைத் தாக்குதல் நபர்கள் எட்டுப் பேர் கொழும்பு வந்திருப்பதாக புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

''கொல்வதற்கான புதிய வழிமுறைகளை மதி நுட்பத்துடன் புலிகள் சிந்தித்து வருவர்'' — என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி எச். எம். ஜி. பி. கொட்டகதெனிய கூறுகின்றார்.

தன்னைப் பாதுகாப்போர் கரும்புலிகள் போல விரைவாகவும் உறுதியுடனும் செயற்படக் கூடியவர்கள் என்பது தான் ஜனாதிபதியின் ஒரே நம்பிக்கை.

— இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பிரபாவிடம் அதி நவீன தொலைத் தொடர்பு கருவி

கொழும்பு, டிச. 20

அதிநவீன —செயற்கை கோள் மூலமான — தொலைத் தொடர்பு வசதிகளை விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் வைத்துள்ளார். அதன் மூலம் பல்வேறு வெளிநாடுகளிலும் உள்ள செயற்கைக் கோள் நிலையங்களுடனும் தொடர்பு கொள்ள முடியும். இதற்கான செலவை பாரிஸில் இருந்து இயங்கும் விடுதலைப் புலிகளின் அலுவலகம் வழங்குகின்றது.

— இவ்வாறு ''த சண்டே லீடர்'' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்திருக்கின்றார். (உ)

## பெரும்தொகை பணத்துடன் 3 புளொட் உறுப்பினர் கைது!

கொழும்பு, டிச. 20

88 லட்சம் ரூபாய் பணம் மற்றும் பங்களாதேஷ், கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கான விமான டிக்கெட்டுகளுடன் புளொட் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூவர் கொக்கரல்ல பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து கொழும்பு, நோக்கி தனியார் வாகனமொன்றில் சென்று கொண்டிருந்தபோதே இம் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த. சித்தார்த்தனின் சாரதி என விசாரணையின்போது தெரிய வந்திருப்பதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-10)

## போரில் ஊனமடையும் படையினர் அதிகரிப்பு!

### பராமரிக்க மேலும் நிலையங்கள்

கொழும்பு, டிச. 20

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் அங்கவீனம் அடையும் படையினரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து அவர்களை வைத்து பராமரிக்க மேலும் 3 நிலையங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

அங்கவீனம் அடையும் படையினருக்கு தொழிற் பயிற்சி மற்றும் புனர்வாழ்வு அளிக்க தற்சமயம் ஒரு பராமரிப்பு நிலையமே உள்ளது.

அங்கவீனம் அடையும் படையினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் குருநாகல், கண்டி, வெலிகம ஆகிய இடங்களில் 3 பராமரிப்பு நிலையங்கள் புதிதாக அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் அலரிமாளிகையில் நடந்த கூட்டம் ஒன்றில் இதற்கென விசேட செயலணிக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3-6)

## நிவாரணப் பொருள்களை மாதாந்தம் பெறப் பணிப்பு!

### புதிய நிபந்தனை விதிக்கிறது அரசு

கொழும்பு, டிச. 20

வடபகுதி மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒதுக்கப்படும் மாதாந்தக் கோட்டா உணவு நிவாரணப் பொருள்களை அந்தந்த மாதங்களிலேயே பெற்றுக் கொள்ளவேண்டும். அடுத்து வரும் மாதத்துக்கான பொருள்களுடன் சேர்த்து இனிமேல் அவை அனுப்பி வைக்கப்படமாட்டாது.

இவ்வாறு புதிய நிபந்தனை ஒன்றை அத்தியாவசிய சேவைகள் திணைக்கள ஆணையாளர் விதித்திருக்கிறார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணப்பொருள்களின் மாதாந்தக் கோட்டா ஒன்றை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அந்தந்த மாவட்ட அரச அதிபர்களுக்கு அனுப்பி வைத்திருப்பதாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

குறிப்பிட்ட மாதத்துக்குரிய மாதாந்தக் கோட்டா உணவுப் பொருள்களை அந்த மாதத்திலேயே பெற்றுக் கொண்டுவிடவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தவிர்க்கமுடியாத நிலைமைகள், போக்குவரத்துப் பிரச்சினை, கெடுபிடிகள் தோன்றும் பட்சத்தில் கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை மாதாந்தம் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படும் என்பதும்—

இந்தப் புதிய நிபந்தனையால் வடபகுதி மக்கள் தமது நிவாரண உணவுப் பொருள்களை இழக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (ஐ-30)

## பெருமளவு தபால்கள் தேங்கிக் கிடக்கின்றன

### உரியவர்கள் பெறவில்லை

தென்மராட்சி, டிச. 20

கடந்த மாதம் குமண கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்களில் வலிகாமம் பகுதி பாடசாலைகளுக்குரிய தபால்களும், தபால்பெட்டி இலக்கமிடப்பட்ட தபால்களும் உரியவர்களால் பெற்றுக் கொள்ளப்படாத நிலையில் பிரதம தபால் நிலையத்தில் பெரும் எண்ணிக்கையில் தேங்கியுள்ளன.

இவற்றுடன் யாழ். நகரப் பகுதி மக்களால் பெற்றுக் கொள்ளப்படாத தபால்களும் பல பொதிகளில் வைக்கப்பட்டுள்ளன.

விநியோகிக்கப்படாத தபால்கள் பொதிகளாகத் தேங்கியுள்ளதால் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கும் யாழ். பிரதம தபாலகத்தில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (ஐ-117)

## தொழு நோயாளர்கள் சிகிச்சை பெற வசதி

யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்று வந்த தொழு நோய் சிகிச்சை தற்போது பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் உள்ள புனர்வாழ்வுப் பிரிவில் வாரந்தோறும் புதன்கிழமைகளில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதேவேளை —

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் தொழு நோய்ச் சிகிச்சை மாதந்தோறும் 3 ஆம் 4 ஆம் செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி நோயாளர்கள் தமக்கு வசதியாக அருகில் உள்ள இடங்களில் இச்சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம். (ஐ)

## தேவை

எமது செயலகத்திற்கு பின்வரும் பொருர்கள், மிகவும் அத்தியாவசியமாக தேவைப் படுவதால், இதனை வழங்கக் கூடிய பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், வர்த்தகர்கள் மேலதிக அரசாங்க அதிபருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கவும்.

01. காகிதாதிகள்.
02. எழுது கருவிகள்,
03. அலுமினியப் பொருள்கள்,
04. பிளாஸ்ரிக் பொருள்கள்.
05. எனாமல் பொருள்கள்.
06. துடை துண்டுகள் (Duster).
07. தும்புத்தடி.
08. விளக்குமாறு.
09. கழிவு கடதாசிக் கூடை.
10. ஆமைப் பூட்டுக்கள்.

செ. பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்

[சி/3057]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மக்கள் எழுச்சி இங்கும் வேண்டும்

சென்னையில் நடைபெறும். 'சாவ்' விளையாட்டுப் போட்டிகளில் ஸ்ரீலங்கா அணி கலந்து கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் நடைபெற்றுள்ளன.

'சாவ்' விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமான தினத்தில் மறுமலர்ச்சி தி. மு. க. அதன் தலைவர் கோபாலசாமி தலைமையில் மாபெரும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் ஒன்றை சென்னையில் நடத்தி இருந்தது.

அதுமட்டும் அல்ல சென்னையில் உள்ள ஸ்ரீலங்கா வங்கிக் கிளை முன் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, வங்கிக்குள் புகுந்து ஸ்ரீலங்கா எதிர்ப்புக் கோஷமிட்டவர்களை வெளியேற்ற தடியடிப் பிரயோகமும் செய்ய வேண்டியதாயிற்று.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று, தமிழ்நாட்டில் மற்றொரு சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

திருச்சியில் தமிழ் இளைஞர் ஒருவர் தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் தமிழீழ மக்கள் தனித்து விடப்பட்டு விடவில்லை. அவர்களுக்குப் பின்னால் தமிழ்நாடு நிற்கிறது என்பதை ஸ்ரீலங்கா சிங்கள அரசுக்கு தமிழ்நாட்டு மக்கள் உணர்த்தி உள்ளனர்.

திருசசியில் நடைபெற்ற சம்பவம் அனைவரையும் சிந்திக்க வைத்துள்ளது.

அந்த தமிழ் இளைஞர் தனது தாய் நாட்டுக்காக உயிர்தியாகம் செய்யவில்லை. மற்றொரு நாட்டில் வாழும் தனது இனமக்களுக்காக உயிர்த்தியாகம் செய்துள்ளார். அதாவது ஸ்ரீலங்கா சிங்கள அரசுக்கு எதிராக தமிழ்நாட்டில் ஒரு மக்கள் எழுச்சி உருவாகி வருகிறது.

ஸ்ரீலங்கா அரசு கடந்த பல ஆண்டு காலமாக தமிழீழ மக்கள் மீது எத்தனையோ அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகி இருக்கின்றனர். தமிழர்களின் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டு விட்டன.

கடைசியாக நடைபெற்ற ''சூரியப் பிரகாசம்'' ராணுவ நடவடிக்கை ஒட்டுமொத்தமாக தமிழர்களை அவர்களது சொந்த இடங்களில் இருந்து ஏதிலிகளாக வெளியேற வைத்துவிட்டது. அது மட்டும் அல்ல ஸ்ரீலங்கா அரச படையினர் தமது ராணுவ நடவடிக்கைகள் இன்னும் தொடரப்போவதாகக் கூறிக்கொண்டு மேலும் இன அழிப்புக்கும் தமிழர்களின் சொத்தை நாசம் செய்தற்கும் திட்டமிட்டு வருகின்றனர்.

இத்தகைய நிலையிலேயே தமிழ்நாட்டில் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகவும் தமிழீழ மக்களுக்கு ஆதரவாகவும் மக்கள் எழுச்சி இடம்பெற்று வருகின்றது.

இப்படியான ஒரு மக்கள் எழுச்சி தமிழீழத்திலும் ஏற்படவேண்டும். அப்போது தான் எமது போராட்டத்தை வேகமாக முன்னெடுத்துச் செல்லமுடியும். உண்மையான மக்கள் எழுச்சி ஒன்று ஏற்படும்போதே எமது விடுதலையை விரைவுபடுத்திக் கொள்ளமுடியும்.

---

### கிழக்கு புலிகளிடம் வீழ்ந்ததால்

## பொலன்னறுவை மட்டுமே கொழும்பு - மட்டு. ரயில்!

கொழும்பு, டிச. 20

கொழும்பு — மட்டக்களப்பு ரயில் சேவையை பொலன்னறுவையுடன நிறுத்த வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு காரணங்களுக்காக டிசம்பர் 15 ஆம் திகதி முதல் கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை பொலன்னறுவையுடன் இடைநிறுத்தப்படுவதாக ரயில்வே திணைக்களத்தின் கிழக்கு மாகான உதவி அத்தியட்சகர் ஜே. வி. ஆரியரட்ண தெரிவித்தார். (உ)

## அதிபர்கள் கூட்டம்

கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்ததை அடுத்து —

வடமராட்சி, டிச. 20

வடமராட்சி பகுதியில் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

கரவெட்டி கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன் காலை 10 மணிக்கு புனித இருதயக் கல்லூரியிலும் —

மருதங்கேணி கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழன் காலை 10 மணிக்கு அம்பன் அ. மி, த.க பாடசாலையிலும் —

பருத்தித்துறைக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும் என்று வலயம்-II கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அறிவித்துள்ளார்.

## செப்ரிசீமியா: குழந்தை மரணம்

செப்ரிசீமியா தாக்கத்துக்கு உள்ளாகி நான்கு மாதக் குழந்தை ஒன்றுமரணமானது.

அராலி மேற்கில் இருந்து இடம்பெயர்ந்து தச்சன் தோப்புகோவிலாக் கண்டியில் தங்கியுள்ள நடராசா ஜெயரஞ்சன் என்னும் குழந்தையே சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரணமானது. (ஐ-117)

## நலனோம்பு நிலையங்களில் சத்துணவுத் திட்டம்

### அரச அதிபர் ஆரம்பித்து வைத்தார்

சாவகச்சேரி, டிச. 20

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மாரட்சிப் பகுதியில் நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ளவர்களின் போசாக்கு நிலையைக் கருத்தில் கொண்டு சத்துணவுத் திட்டம்ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தை— சாவகச்சேரி நகர வலயத்தில்— மீசாலை கிழக்கு மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் — யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

சாவகச்சேரி நகர வலய மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடந்த இந்த ஆரம்ப நிகழ்வில் சத்துணவுத் திட்டத்தின் நோக்கம் குறித்து அரச அதிபர் விளக்கமளித்தார்.

இந்த சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஒரு வயதுக்கும் 5வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்கு காய்ச்சிய பாலும் —

இரு வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சமைத்த பயறும் வழங்கப்பட்டது.

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு லக்டோஜன் பால் மாவும் வழங்கப்பட்டது.

சாவகச்சேரி நகர வலயத்தில் 66 நலனோம்பு நிலையங்களிலும் இத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப்பட்டது.

கைதடி வலயத்தில் கைதடி வலய மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. கேதீஸ்வரன் அந்த வலயத்தில் உள்ள 15 நலனோம்பு நிலையத்திலும் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளார்

இத்திட்டம் தொடர்ந்து தினமும் நலனோம்பு நிலையங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. (ஐ-3)

## ராணுவத்தில் சேர பிக்குகள் தொடர்ந்து ஆர்வமாம்

தென்பகுதியில் இராணுவத்துக்கு ஆட்சேர்க்க நடைபெறும் நேர்முகத் தேர்வு நிலையங்களுக்கு செல்வதில் இளம் பௌத்த பிக்குகள் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பனாகொடையில் நடைபெற்ற இராணுவத்துக்கு ஆட்களைச் சேர்க்கும் நேர்முகப் பரீட்சையில் நான்கு பௌத்த பிக்குகள் தோற்றினர். இவர்களில் ஒருவர் பட்டதாரி ஆவார்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே தான் இராணுவத்தில் சேரவுள்ளதாக அவர் ''லங்காதீப''வுக்குத் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## அணுகுண்டுச்சோதனை இந்தியா நடத்துமா?

### அமெரிக்கா சந்தேகம்

1974 ஆம் ஆண்டின் பின் இந்தியா முதல் தடவையாக அணுகுண்டுப் பரிசோதனை ஒன்றை நடத்த இருப்பதாக அமெரிக்க உளவுப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர். இச் சந்தேகத்தை அடுத்து இந்தியா அந்த முயற்சியைக் கைவிட வேண்டும் எனக் கருதி அதற்கேற்ப செயற்பட அமெரிக்கா ஆரம்பித்திருப்பதாக ''நியு யோர்க் டைம்ஸ்'' [illegible] துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தின் பொகாரன் பரிசோதனைத் தளப் பகுதியில் கடந்த சில வாரங்களில் நடந்தப்பட்ட நடவடிக்கைகள் பலவற்றை உளவுச் செய்மதிகள் பதிவு செய்துள்ளன.

இந்தியா அணுகுண்டு ஒன்றை வெடிக்கச் செய்ய முயல்கிறதா அல்லது வேறு ஏதும் பரிசோதனையில் ஈடுபட்டுள்ளதா என்பது குறித்து அமெரிக்க உளவுப் பிரிவினர் கருத்து எதனையும் தெரிவிக்க வில்லை. (ஐ)

---

## வைப்பகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளோர்

சாவகச்சேரி, டிச. 20

கீழ்க் குறிப்பிடப்படுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை வியாழன் மு.ப.10மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ குமாருரத்தினம் அல்லது புஸ்பரத்தினம் — புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம்.

★ இரத்தினதேவி சுந்தரம் — மஞ்சத்தடி விவேகானந்தா வீதி, இணுவில் தெற்கு, இணுவில்.

★ ராஜகோபால் நந்தகுமார் (போதனை ஆசிரியர்) — பவனபவளம், யாழ்வளாகம், இல: 674 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

★ செல்லா இராஜேந்திரம் — விக்கினேஸ்வரா வீதி, சங்கானை

★ கே. இளங்கோவன் — 111, ஓடை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ நடராஜா பவிதரன் — புதுத்தோப்பு ஒழுங்கை, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

★ விஜிதமாலா நல்லையா — ஆவரங்கால், புத்தூர்.

★ இராஜேஸ்வரி குலசிங்கம் அல்லது சிவசம்பு பஞ்சாட்சரம் — இணுவில் தெற்கு, இணுவில்.

★ அன்னலட்சுமி இளையதம்பி—பெரிய கிணற்றடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

★ ஆறுமுகம் சிவானந்தம் — மாவடி வளவு, பத்தைமேனி, அச்சுவேலி.

★ கனகரத்தினம் காந்தரூபன்—புதிய வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ தில்லையம்பலம் இராசதுரை — சங்கரத்தை குளத்தடி வட்டுக்கோட்டை.

★ சிங்கராஜா மரியநாயகம் — இல. 28 கொட்டடி வீதி, குருநகர்.

★ சண்முகம் வேலுப்பிள்ளை — சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

★ திருமதி இராசம்மா வேலுப்பிள்ளை —மணி மண்டபம் சென்ரர், நவாலி வடக்கு, மானிப்பாய்.

★ அலோசியஸ் சிறிமரியா—மக்கள் இல்லம், உயரப்புலம், ஆனைக்கோட்டை.

★ கணேசு அன்னபூரணம் — காளிகோவிலடி வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

★ திருமதி பூமணி மாணிக்கம் — பருத்தித்துறை வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

★ திருமதி சின்னப்பிள்ளை இராமநாதன் அல்லது இராமநாதன் சுப்பிரமணியம் — சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

★ கணபதிப்பிள்ளை செல்லத்துரை (அன்னம்மா)— கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

★ ஆறுமுகம் சபாநாயகன்—கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

★ ஆறுமுகம் ஞானக்கொழுந்து — கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

★ செ. இராசமலர்—'விமலவாசா' வட்டு.கிழக்கு, சித்தன்கேணி.

★ பி.எல்.ரி. ஆனந்தராஜா — மே/பா. பி. எஸ். கந்தையா, லோர்டன் வீதி, மானிப்பாய்.

★ குணேஸ்வரி சிவப்பிரகாசம் — இல. 12, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

★ அருணாசலம் கனகசபை — முள்ளானை, இளவாலை.

★ பிலிப்ஸ் வின்ரன் — 38/4, லோட்டன் வீதி: மானிப்பாய்.

★ வேலுப்பிள்ளை மகேந்திரன் (உதவிக் கல்வி நிர்வாகி) — 56/1, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ க. வேலாயுதம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) — தலையாழி, கொக்குவில்.

★ விஜயலக்மி குணரட்ணம்—இலந்தைகட்டி வைரவர் கோவிலடி' அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

★ ரி. இராசையா — மே/பா. ரி. சிவகுரு. 626/7, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

★ க. சண்முகராசா — மே.பா. வே. ஞானசூரியர், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ திருமதி திலகா கனகலிங்கம் — 84, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

★ திரு திருமதி கே. கந்தையா அல்லது திரு. திருமதி தனபாலசிங்கம் — 66, அத்தியடி வீதி, யாழ்ப்பாணம். அல்லது ஊரெழு கிழக்கு,

★ இராஜேஸ்வரி கந்தையா—27, முதலியார் லேன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ பொ. கணேசலிங்கம் சின்னராசா — சுகிதா நகைமாளிகை, சுன்னாகம்.

★ நாகேந்திரம் தங்கரத்தினம் — 73, சங்கிலியன் வீதி, நல்லூர்.

திருமதி சசீலா சிறீஸ்காந்தன் — 26, பொற்பதி றோட், கொக்குவில்.

★ திருமதி வசந்தாதேவி கோபாலபிள்ளை — 15/10, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

★ வயிரமுத்து இரத்தினசிங்கம் — 80, யாழ்வீதி, யாழ்ப்பாணம்.

★ எஸ். கந்தையா — புதிய வீதி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

★ ஏ. சவரிமுத்து —மே.பா. ஏ. இரட்ணசபாபதி, தாவடி வடக்கு கொக்குவில்.

★ வீ· சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் — கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி முருகன் கோயில், யாழ்ப்பாணம்.

★ புஸ்பரஞ்சினிதேவி சாமுவேல் — உடுவில் மேற்கு சுன்னாகம்.

[ஐ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கை அணி முறைப்பாடு

சென்னையில் தமக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சி வசதிகள் போதுமானவையாக இல்லை என்று 'சாவ்' விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள இலங்கை அணியினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இலங்கை அணி 'சாவ்' போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தமிழ் நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதை அடுத்து இவர்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது (இ)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சிவசுப்பிரமணியம்

(ஆச்சாரி — பதுளை)

செல்லையா சிவசுப்பிரமணியம் (ஆச்சாரி) 18-12-95 இல் காலமானார்.

இவர் மாரியாவின் அன்புக் கணவரும், ரமேஸ், சுரேஸ், தினேஸ், சர்வேஸ், விஜயா, சிந்துஜா, பவித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தி அவர்களின் மாமனாரும், தனுஷனின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19-12-95 நேற்று நாவற்குழி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
சுரேஸ்
(மகன்)

நாவற்குழி.

(39652)

## அந்தோனி சில்வேரியன் மரியரத்தினம்

(முன்னாள் காலி மறைமாவட்டமறை ஆசிரியர்)

பலாலியை பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி - சில்வேரியன் மரியரத்தினம் காலமானார்.

இவர் ம. செ. ம. மரியசெல்வராணி (ஆசிரியை, கோப்பாய் நாவலர் பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், S. M. G. மரியதாஸ் (எழுகதிர் சாவகச்சேரி), தெலசால் மரியதாஸ் (P. T. தையலகம், யாழ்.), மொணிக்கா ஞானமலர் (மீறா - கிறீஸ்தவக் கல்லூரி, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அகஸ்தீன் பிரான்சிஸ், திருமதி ஞானம்மா பீரான்சீஸ் ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதிகள் பரமேஸ்வரி அபிசேகநாதர், மரியராஜபுஸ்பம் திருச்செல்வம், மேரிறோஸ்முத்து இம்மானுவல், திருஞானசீலன் (ஆசிரியர் முழங்காவில் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிசேகநாதர் (சீமெந்து கூட்டுத்தானம்), காலஞ்சென்ற அருட் தியாக்கோன் மரீயபாக்கியநாதர் (S. J.) காலஞ்சென்ற நேசம்மா அருளப்பு ஆகியோரின் அன்பு சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 52, இந்திராபுரம் முகமாலையில் உள்ள திரு. பா. ஜோர்ஜ் அவர்களது இல்லத்திலிருந்து 20 - 12 - 95 மாலை 2.00மணிக்கு இத்தாவில் புனித பார்பரம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இத்தாவில் சோமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி மரியரத்தினம்

புனித செபஸ்ரியார் வீதி,
பலாலி

(39655)

## ஐயாத்துரை துரைச்சாமி (தேவு)

சங்கானை பாரதி வீதியைச் சேர்ந்த ஐயாத்துரை துரைச்சாமி (தேவு) நேற்று முன்தினம் 18 - 12 - 95 அன்று பாலாவி, கச்சாயில் அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை, சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜீவசுரேஸ், ஜீவினி, ஜீவசுகிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா (ஜேர்மனி) (முன்னைநாள் ப. தெ. வ. அ. கூ. ச சங்கானை தலைவர்), இராசகுலசிங்கம், லோகராசா (ஜேர்மனி), கந்தசாமி (ஜேர்மனி), ஜெயபாலசிங்கம், மனோகரன், சந்திரபாலன், சரஸ்வதி, இரத்தினபாக்கியம், புஸ்பராணி, இராசாத்தி, இராசமலர், கோமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சர்வேஸ்வரன், இராஜேஸ்வரன், நடராசா, மார்க்கண்டு, மகாலிங்கம், சின்னத்தம்பி, கணேசலிங்கம், செல்வராணி, பரமேஸ்வரி, தவராணி (ஜேர்மனி), சந்திரவதனா, கனகாம்பிகை, சிவாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கணேசநேசன் (கொழும்பு), நேசராணி, கமலவரதன், கமலா, புஸ்பலதா, விக்னேஸ்வரன், சர்மலா, சசிகலா, சசிகரன், தரிசினி, நளினி, குமாரராசா, வேவிமலர், ஜெயசிங்கம் (ஜேர்மனி), றமேஸ்வரன், சதீஸ்வரன், தயேந்தினி, றகிதா, கவிதா, விசிதா, ஐந்தினி, சுதாஸ்கரன், சுகிதா, சுதர்சினி, அனுசுயா, கயன், தயன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரேறன்ஸ், அனுசன், அனுசா, தினேஸ், டார்சன், சஞ்சீவன், லெசீபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நேற்று (19 - 12 - 95) நண்பகல் 12.00 மணிக்கு பாலாவி கச்சாயில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜீவசுரேஸ் (ஜீவா)
(மகன்)

தற்போதைய முகவரி:
பாலாவி, கச்சாய்.

(39651)

## வங்கிகளில் காசோலைகள் ஏற்கப்படும்

சாவகச்சேரி, டிச. 20

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, ஹட்டன் நாஷனல் வங்கி, வர்த்தகவங்கி ஆகியவற்றின் காசோலைகள் எல்லா வங்கிகளின் கிளைகளிலும் மேலும் இரண்டு நாட்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் —

சகல வங்கிகளினதும் பிரதான முகாமையாளர்கள் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் வங்கியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இன்று 20 ஆம் திகதியும் நாளை 21 ஆம் திகதியுமே மேற் குறிப்பிடப்பட்ட வங்கிகளில் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## ஹபரண..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இக்கப்பலில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கு தாப்பலீன் சீற்றுக்கள் மற்றும் நிவாரணப்பொருள்களும் வந்தன (இ-3-173)

## கூட்டணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படி கூட்டணி கோரி இருந்ததாகவும் —

அரசாங்கத்துக்கு நிபந்தனையுடன் ஆதரவு வழங்க கூட்டணி விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## யாழ். மாவட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பனவு வழங்கப்பட்டு வந்தது.

இந்த வழமையான நடைமுறைப்படி யாழ். செயலகத்தின் கொழும்பு அலுவலக அதிகாரிகள் திறைசேரியின் கொடுப்பனவு மற்றும் கணக்குகளுக்குப் பொறுப்பான பணிப்பாளருடன் தொடர்பு கொண்டதாகவும் —

சம்பளக் கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டாம் என தாம் பணிக்கப்பட்டுள்ளதாக அவர் யாழ். செயலக அதிகாரிகளிடம் வாய் மூலமாகத் தெரிவித்ததாகவும் —

கொழும்பிலிருந்து யாழ். செயலகத்துக்கு அதன் கொழும்பு அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான உத்தியோக பூர்வமான சுற்றறிக்கையோ — எழுத்து மூல உத்தரவோ — எதுவும் இதுவரை அரசால் விடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

யாழ் போதனா வைத்திய சாலை மத்திய அரசின் கீழ் இருந்தாலும் —

யாழ்ப்பாணத்தில் இருந்து அந்த ஆஸ்பத்திரியை பருத்தித்துறைக்கு மாற்றுவதற்கு அரசின் அனுமதி முன்னரே பெறப்பட்டிருந்ததால் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கான சம்பள கட்டுநிதியை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

குடாநாட்டில் உள்ள ஏனைய அரச ஆஸ்பத்திரிகள் மாகாண சபைக்குக் கீழ் வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-7)

# இடம்பெயர்ந்தோருக்கு ஐ. நா. உதவி கிடைக்கும்

கொழும்பு, டிச. 20

ஸ்ரீலங்கா அரச படையினரின் சமீபத்திய இராணுவ நடவடிக்கை காரணமாக குடாநாட்டில் இருந்து வெளியேறியோருக்கு ஐ.நா. நிவாரண உதவிகளை வழங்க உள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண உதவிகள் இந்த மாதம் தொடக்கம் இரண்டு மாதங்களுக்கு வழங்கப்படும் என்று ஐ.நா. நிவாரண ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டதுக்கு இணங்க கிடைக்க உள்ள ஐ.நா. நிவாரண உதவிகளில் சமையல் உபகரணங்கள், உடுபுடைவைகள், கூடாரங்கள் ஆகியவை அடங்கும்.

இடம்பெயர்ந்த மக்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்நோக்குவதால் 22 ஆயிரம் கொள்கலன்களும் வழங்கப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## ஷெல் வீச்சு

திருகோணமலை, டிச. 20

மூதூர். ஜி. பி. எஸ். இராணுவ முகாமிலிருந்துஸ்ரீலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு ஏவப்படும் ஷெல்கள் கிரவல்குழி, சீதனவெளி, கம்புவெளி கிராமங்கள் மீது விழுந்து வெடிக்கின்றன. இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

## யாழ். மீதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று வடக்கிலும் அதற்கு வெளியிலும் வசிக்கும் எந்தத் தமிழனின் வீட்டிலும் நிம்மதி கிடையாது.

தென்பகுதி அரசுகள் எப்போதும் நம்பிக்கையீனத்துடனேயே செயற்பட்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தை ஐந்து வருடங்களுக்குப் புலிகளிடம் ஒப்படைக்கும்படி கூறியிருந்தேன். அதனை ஏற்று செயற்பட்டிருந்தால் சமாதானப் பாதையில் அவர்களையும் இணைத்திருக்கலாம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனையை முன்னைய அரசோ, அல்லது தற்போதைய அரசோ செவிமடுத்திருப்பின் இன்று தமிழ் மக்கள் நிம்மதியாக இருந்திருப்பார்கள்.

கேள்வி:– சமாதானப் பேச்சு நடத்தப்பட்ட போதெல்லாம் புலிகள் ஒருதலைப் பட்சமாக அவற்றை முறித்துக் கொண்டு போயிருப்பது உண்மையல்லவா.

பதில்:- சிங்களத் தலைவர்கள் புலிகளுக்கு பொய் சொன்னதாலேயே அவ்வாறு ஏற்பட்டது.

முன்னைய பண்டா செல்வா — ஒப்பந்தம் முதல் சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளனர்.

புலிகள் கெரில்லா இயக்கத்தினர். ஆனால் அவர்களுடன் இந்நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்கள் பேச்சு நடத்தியுள்ளனர். இந்தத் தலைவர்கள் தவறான வழியில் செயற்படுகையில் புலிகளிடமிருந்து மட்டும் சரியான வழியை எதிர்பார்ப்பது தவறாகும்.

கேள்வி:- சூரியப்பிரகாச நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கத் தேவையில்லை எனக் கருதுகின்றீர்களா.

பதில்:– தமிழருக்கு வேண்டியது சமாதானம். தமிழ் — சிங்கள மக்கள் இணைந்து வாழ வழிசமைப்பதற்கு வாய்ப்பிருக்கையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதால் அவர்கள் நிரந்தரமாகப் பிரிக்கப் பட்டுள்ளனர்.

கேள்வி:- அரசு தமிழை அரசகரும மொழியாக்கியுள்ளதல்லவா?

பதில்:– அது வெறும் கடதாசியில் மட்டும்தான்.

கேள்வி:- சூரியப்பிரகாச நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாக அரசு கூறியுள்ளதே?

பதில்:– மக்களற்ற பாலைவனத்தையல்லவா படைகள் கைப்பற்றியுள்ளன?

கேள்வி:– இந்த நடவடிக்கையின் பின்னர் புலிகள் மேலும் பலமடைந்துள்ளனரா?

பதில்:- ஆம். முழு யாழ். நகரத்தையும் மக்களற்ற பகுதியாக்க அவர்களால் முடிந்ததல்லவா.

கேள்வி:- நீங்கள் ஏன் புலிகளுக்கு சார்பாகப் பேசுகிறீர்கள்.

பதில்;- நான் பிரபாகரனுக்கோ அல்லது புலிகளுக்கோ சார்பாகப் பேசுபவனல்லன். சரி எனப்படுவதை பயமின்றித் தெரிவிப்பவன்.

நான் இந்த அரசில் அமைச்சராக இருப்பினும், அரசு செய்யும் தவறுகளை ஏற்றுக் கொள்ள நான் தயாராக இல்லை. நான் அவ்வாறு அன்றும் செய்ததில்லை; இன்றும் செய்யவில்லை. (உ-6)

## மட்டு. நகரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற சந்தேகம் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருந்தது.

அவ்வீதியால் வந்த வாகனங்கள் வேறு பாதையால் திருப்பப்பட்டன. நகரில் கூடியிருந்த மக்கள் கலவரமடைந்தனர்.

பின்னர் அந்த சைக்கிள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதற்குள் சந்தேகத்துக்கிடமான பொருள் எதுவும் காணப்படவில்லை.

பதற்றம் தணிந்த நீண்ட நேரத்தின் பின் மது போதையில் ஒருவர் அந்த இடத்துக்கு வந்தார் என்றும் அந்தச் சைக்கிள் தம்முடையது என்று அவர் உரிமை கோரினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)


★ ராசி சில்க்ஸ் ★

நத்தார், புதுவருட மலிவு விற்பனை

[ 18-12-95 தொடக்கம் 5-1-96 வரை ]

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி நெல்லியடியிலும் எமது ஸ்தாபனத்தை [இன்று 20 - 12 - 95] ஆரம்பித்துள்ளோம்.

ராசி சில்க்ஸ்,
கண்டி வீதி,
[புகையிரத நிலையம் முன்பாக]
கொடிகாமம்.

ராசி சில்க்ஸ்,
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

★ சுப முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு பெயர்பெற்ற ஸ்தாபனம் ★

[சி/3060]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 20-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org